செ.வெ.எண்.333/2009/செமதொஅ நாள்: 08.10.2009

**கல்பாக்கம் அணுமின்நிலையத்திலிருந்து கதர்வீச்சு வெளியானால் தப்புவது எப்பது என்பது குறித்த ஒத்திகை இரு கிராமங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அணுமின்நிலையத்தில் இருந்து கதிர்வீச்சு வெளிப்பட்டால் தப்புவது எப்படி என்பது குறித்த ஒத்திகை கல்பாக்கம் அருகே இரு கிராமங்களில் நடத்தப்பட்டது. சென்னை அடுத்த கல்பாக்கத்தில் உள்ள அணுமின் நிலையத்தில் அணுக் கதிர்வீச்சு வெளியானால் சுற்றியுள்ள 19 கிராமங்கள் பாதிக்கப்படும் என்று கண்டறியப்பட்டுள்ளது. கதிர்வீச்சில் இருந்து தப்பிப்பது எப்படி என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அவசரகால ஒத்திகை நடத்துவது வழக்கம். இந்த ஒத்திகை கல்பாக்கம் அணுசக்தி துறையின் அவசர காலகுழு சார்பில் எச்சூர், மணமை ஆகிய கிராமங்களில் நடத்தப்பட்டது.

மாவட்ட அதிகாரிகள் மற்றும் அணுமின் நிலைய அதிகாரிகளின் தயார் நிலையை சரிபார்ப்பது, தொலை தொடர்பு கருவிகளை சோதிப்பது, பொது மக்களை பாதுகாப்பது போன்றவை இந்த ஒத்திகையின் நோக்கம். ஒத்திகையின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் கிராம மக்களிடம் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அணுக்கதிர் வீச்சு வெளியானதாக தகவல் தெரிவிக்கப்பட்டதும், முதல் நிலையில் வீட்டின் கதவு, ஜன்னல்களை பூட்ட அறிவுறுத்தப்பட்டது. 2வது நிலையில் பாதிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டதும், அவர்கள் உடல்நிலையை பாதுகாக்க அயோடின் மாத்திரை வழங்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக சாக்லேட் வழங்கப்பட்டது. தாக்கம் அதிகரித்து 3வது நிலைக்கு சென்று விட்டதாக அதிகாரிகள் கூறியதும், கிராம மக்களை அரசு பஸ்களில் 16 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள திருக்கழுக்குன்றம் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு மக்கள் மீது தண்ணீர் பீய்ச்சி கதிர்வீச்சி பாதிப்பை குறைத்தனர். அப்போது 'கன்டா மினேஷன்' என்ற கருவி மூலம் அவர்களை சோதனை செய்து கதிர்வீச்சு இல்லை என முடிவு செய்தபிறகு, அவர்களை திருப்பி அனுப்பி வைத்தனர்.

முன்னதாக இந்த ஒத்திகை குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., கல்பாக்கம் அணுமின் நிலைய இயக்குநர் திரு.கே.ராமமூர்த்தி, கல்பாக்கம் அவசர கால் கமிட்டி செயலாளர் திரு.டெல்லிதுரை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பிரேம் ஆனந்த்சின்கா இ.கா.ப, ஆகியோர் கூறியதாவது,

கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் நேற்று காலை 6.25 மணிக்கு அணுக்கதிர்வீச்சு வெளியானதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. அணுமின் நிலைய அதிகாரிகள், காவல்துறை மூலம் மக்களை உஷார்படுத்தினர். 7.30 மணிக்கு முதல்நிலை பாதிப்பு ஏற்பட்ட தகவலும், 10.00 மணிக்கு 2வது நிலை பாதிப்பு ஏற்பட்ட தகவலும், 11.30க்கு 3ம் நிலை பாதிப்பு ஏற்பட்ட தகவலும் தெரிவிக்கப்பட்டது. விபத்து ஏற்பட்ட இடம் மற்றும் காற்று எந்த திசை நோக்கி வீசுகிறதோ, அந்த கிராமத்தை முதன்முதலாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக, இந்த ஒத்திகை நடத்தப்பட்டது. இதைத் கண்டு பொதுமக்கள் பீதி அடைய வேண்டாம் என தெரிவித்தனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.